Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

# TNPSC

## Previous Year Paper
### Assistant Jailor
### 22 Dec 2019 Paper-II
### (General Tamil)

Teachingninja.in

வினாத் தொகுப்புக் குறியீடு : **AAA**

பதிவு எண் | | | | | | | | | |

**2019**

# தாள் - II

# பொது தமிழும் பொது அறிவும்

கால அளவு : மூன்று மணி நேரம் ] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்கத் தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையேனும் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்புக் குறியீட்டை (Question Booklet Code) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும். வினாத்தொகுப்புக் குறியீட்டை விடைத்தாளில் முறையாக குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக்காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் (A), (B), (C), (D) என **நான்கு** வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியெனக்கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும். எடுத்துக்காட்டாக, நீங்கள் (B) என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக்காட்ட வேண்டும்.

   (A) ● (C) (D)
9. ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும்.
10. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தைவிட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
11. **குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
12. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளே முடிவானதாகும்.
13. நீங்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் இரண்டில் அதற்கென உரிய கட்டங்களில் எழுதி நிரப்ப வேண்டும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
14. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

SEAL



Teachingninja.in

SPACE FOR ROUGH WORK



Teachingninja.in

1. அடிகோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்புத் தருக.

அந்த ஏழைக் குழந்தையின் கண்கள் குழிந்தாழ்ந்து காணப்படுகிறது.

(A) பெயரெச்சம்
(B) வினையெச்சம்
(C) முற்றெச்சம்
(D) ஒரு பொருட் பன்மொழி

2. தைத்திங்கள் என்பது —————— பெயரைக் குறிக்கும்.

(A) இடப்பெயர்
(B) மாதப்பெயர்
(C) காலப்பெயர்
(D) பொருட்பெயர்

3. சொற்களை ஒழுங்குபடுத்துக.

"ஆற்றல் நிரம்பிய சொற்கள் கவிதை தாமாகப் பொங்கி வழிவதுதான்"

(A) தாமாகப் பொங்கி வழிவதுதான் கவிதை ஆற்றல் நிரம்பிய சொற்கள்
(B) ஆற்றல் நிரம்பிய கவிதை சொற்கள் தாமாகப் பொங்கி வழிவது தான்
(C) ஆற்றல் கவிதை நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவது தான்
(D) ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவது தான் கவிதை

4. சொற்களை ஒழுங்குபடுத்துக,

வியனகர் குறைபடாக் கொளக் கூழுடை கொளக்

(A) கொளக் கொளக் கூழுடை வியனகர் குறைபடாக்
(B) கூழுடை வியனகர் குறைபடாக் கொளக்கொளக்
(C) கொளக் கூழுடைய வியனகர் கொளக் குறைபடக்
(D) கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்

5. கீழ்க்காணும் சொற்களை அகர வரிசைபடுத்து

சுற்றம் சீர்தூக்கு சிந்தனை சாட்டை சங்கு

(A) சீர்தூக்கு, சங்கு, சிந்தனை, சாட்டை, சுற்றம்
(B) சிந்தனை சீர் தூக்கு சங்கு சுற்றம் சாட்டை
(C) சாட்டை சுற்றம் சீர் தூக்கு சிந்தனை சங்கு
(D) சங்கு சாட்டை சிந்தனை சீர் தூக்கு சுற்றம்



Teachingninja.in

6. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை அறிக.

நாட்டுக்குத் தேவை –

(A) அரன்
(B) அறன்
(C) அறண்
(D) அரண்

7. வாலை, வாழை, வாளை ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக.

(A) மீன்வகை, மரவகை, இளம்பெண்
(B) இளம்பெண், மரவகை, மீன்வகை
(C) இளம்பெண், மீன்வகை, மரவகை
(D) மரவகை, மீன்வகை, இளம்பெண்

8. ஆங்கில சொல்லுக்கு இணையான தமிழ் சொல்லை தேர்வு செய்க?

"இன்கம் டேக்ஸ் ஆஃபீஸ்" "Incometax office"

(A) வருமானத் துறை அலுவலகம்
(B) வருமான வரி அலுவலகம்
(C) வருமான அலுவலகம்
(D) வருவாய் அலுவலகம்

9. வழூஉச் சொல்லற்ற தொடர் எது?

I. வலது பக்கம் சுவறில் எழுதாதே
II. வலப் பக்கச் சுவரில் எழுதாதே
III. வலப் பக்கச் சுவற்றில் எழுதாதே
IV. வலப் பக்கச் சுவறில் எழுதாதே

(A) IV
(B) I
(C) II
(D) III



Teachingninja.in

10. அணித்து – எதிர்ச் சொல்லைக் கண்டறிக.

(A) தொலைவில்

(B) உய்த்து

(C) கொடுத்து

(D) அளத்தல்

11. சேர்த்து எழுதுக.

பனை + ஓலை =

(A) பனையோலை

(B) பனைஓலை

(C) பனைவோலை

(D) பனைவ்வோலை

12. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்

வற்றல் மரம்தளிர்த் தற்று

இதில் அன்பகத்து இல்லா என்பதனை எவ்வாறு பிரிக்கலாம்

(A) அன்பு + பகத்து + இல்லா

(B) அன்பு + அகத்து + இலா

(C) அன்பு + பகம் + இல்லா

(D) அன்பு + அகத்து + இல்லா



Teachingninja.in

13. இயைபுத் தொடையில் அமைந்த சொற்களை அறிக.

"நீல முடி தரித்த பல மலைசேர் நாடு

நீரமுத மெனப்பாய்ந்து நிரம்பு நாடு"

(A) நீலமுடி – நீரமுத

(B) நீலமுடி – மலைசேர்

(C) நிரம்பு – நாடு

(D) நாடு – நாடு

14. தாயொப்பப் பேசும் மகள் என்ற உவமைத் தொடருக்குப் பொருள் தருக?

(A) தந்தையைப் போன்று பேசுதல்

(B) தங்கையைப் போன்று பேசுதல்

(C) தாயைப் போன்று பேசுதல்

(D) தம்பியைப் போன்று பேசுதல்

15. குடியரசுத் தலைவர் உலகத் தமிழ் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்,

செய்வினையை செயப்பாட்டு வினையாக மாற்றுக.

(A) குடியரசுத் தலைவர் உலகத் தமிழ் மாநாட்டைத் தொடங்கினார்

(B) உலகத் தமிழ் மாநாடு குடியரசுத் தலைவர் தொடங்கினார்

(C) குடியரசுத் தலைவர் தொடங்கினார் உலகத்தமிழ் மாநாட்டை

(D) உலகத்தமிழ் மாநாடு குடியரசுத் தலைவரால் தொடங்கி வைக்கப் பெற்றது

16. நாலடியார் – எனும் நூலைப் பாடியவர்கள் யார்?

(A) சமண முனிவர்

(B) வைணவர்கள்

(C) நாயன்மார்கள்

(D) பௌத்தத் துறவிகள்



Teachingninja.in

17. மணிமேகலையின் தோழி

(A) தீவதிலகை

(B) சுதமதி

(C) மாதரி

(D) வீணாபதி

18. 'பட்டிமண்டபம்' என்பது சமயக்கருத்துகள் விவாதிக்கும் இடம் என்று கூறும் நூல்

(A) சிலப்பதிகாரம்

(B) மணிமேகலை

(C) நீலகேசி

(D) குண்டலகேசி

19. புறநானூற்றில் உள்ள புறத்திணைகளின் எண்ணிக்கை எத்தனை?

(A) ஐந்து

(B) பதினொன்று

(C) பத்து

(D) ஏழு

20. பாடல் வரிகள் கலித் தொகையில் எப்பிரிவில் இடம் பெற்றுள்ளன?

எழுந்தது துகள்

ஏற்றனர் மார்பு

கவிழ்ந்தன மருப்பு

கலங்கினர் பலர்

(A) குறிஞ்சிக் கலி

(B) முல்லைக் கலி

(C) மருதக் கலி

(D) நெய்தல் கலி



Teachingninja.in

21. "ஈயென இரத்தல் இழிந்தன்று ; அதன் எதிர்

ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று; "

கூற்று 1: இப்பாடலடிகளைப் பாடியவர் கழைதின் யானையார்

கூற்று 2 : இப்பாடலில் புகழப்படும் வள்ளல் பாரி

(A) கூற்று இரண்டும் சரி

(B) கூற்று 2 மட்டும் சரி

(C) கூற்று 1 மட்டும் சரி

(D) கூற்று இரண்டும் தவறு

22. 'தமிழை வளர்க்க வேண்டும் என்றால் பிறமொழியை வெறுக்க வேண்டும் என்பது பொருளன்று' என்று கூறியவர்

(A) மு.வ.

(B) திரு.வி.க

(C) பாரதிதாசன்

(D) கவிஞர் சுரதா

23. " சமரச சன்மார்க்க சங்கத்தை " – தோற்றுவித்தவர்

(A) சுத்தானந்த பாரதியார்

(B) ராமகிருஷ்ண பரமாஹம்சர்

(C) மறைமலையடிகளார்

(D) இராமலிங்க அடிகளார்

24.

| | சுவை | | பயன் |
|---|---|---|---|
| (a) | இனிப்பு | 1. | இனிமை |
| (b) | துவர்ப்பு | 2. | வளம் |
| (c) | புளிப்பு | 3. | உணர்வு |
| (d) | கார்ப்பு | 4. | ஆற்றல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |



Teachingninja.in

25. தமிழினத்தைச் சேர்ந்தோர் குடியரசுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடுகள்

(A) கனடா, மலேசியா

(B) பிரிட்டன், ரஷ்யா

(C) தென் ஆப்பிரிக்கா, சிங்கப்பூர்

(D) சிங்கப்பூர், மொரிசியசு

26. "தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தமிழ் அன்னை விருது" பெற்ற பெருமைக்குரியவர் யார்?

(A) கவிக்கோ அப்துல் ரகுமான்

(B) வாணிதாசன்

(C) கண்ணதாசன்

(D) வண்ணதாசன்

27. ஆர்க்காடு என்பது எந்த மரங்கள் சூழ்ந்த பகுதி?

(A) ஆல மரங்கள்

(B) மாமரங்கள்

(C) அத்தி மரங்கள்

(D) ஆர்க் மரங்கள்

28. அண்ணல் அம்பேத்கரை "பகுத்தறிவு செம்மல், மக்களின் மாபெரும் வழிகாட்டி" என புகழாரம் சூட்டியவர்

(A) ஜவகர்லால் நேரு

(B) தந்தை பெரியார்

(C) இராஜேந்திரபிரசாத்

(D) மூதறிஞர் இராஜாஜி

29. காமராசர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு எது?

(A) 1934

(B) 1939

(C) 1937

(D) 1942



Teachingninja.in

30. "அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்" – இவ்வடியில் அமைந்துள்ள மோனை வகை யாது?

(A) மேற்கதுவாய் மோனை

(B) கீழ்க்கதுவாய் மோனை

(C) கூழை மோனை

(D) பொழிப்பு மோனை

31. ஆறுமுக நாவலரை "வசன நடை கைவந்த வல்லாளர்" எனப் பாராட்டியவர் யார்?

(A) மறைமலை அடிகள்

(B) திரு.வி.க

(C) பரிதிமாற் கலைஞர்

(D) குணங்குடி மஸ்தான் சாகிபு

32. "தமிழ் மொழியை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான்" என்று கூறியவர் யார்?

(A) தேவநேயப்பாவாணர்

(B) பரிதிமாற்கலைஞர்

(C) குணங்குடி மஸ்தான் சாகிபு

(D) மகாகவி பாரதியார்

33. நடுவண் அரசு, உ.வே.சா அவர்களின் தமிழ்த்தொண்டினைப் பாராட்டி அஞ்சல் தலை வெளியிட்ட ஆண்டு எது?

(A) 2006 (B) 2007

(C) 2008 (D) 2010



Teachingninja.in

34. சிற்பக்கலை குறித்து தமிழ் நாடு தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் வெளியிட்ட நூலைக் கண்டறிக.

(A) சிற்ப மறை

(B) சிற்பச் சிலை

(C) செந்நூல் சிற்பம்

(D) சிற்பச் செந்நூல்

35. நாயக்கர் காலத்தில் சிறந்து விளங்கிய சிற்பக் கலை எது?

(A) கற்சிற்பம்

(B) செப்புத் திருமேனி

(C) மரச் சிற்பம்

(D) தந்தச் சிற்பக் கலை

36. சுவீடன் நாட்டின் பேர் லாகர்க்விஸ்ட் என்னும் சிறுகதைகளை தமிழில் மொழி பெயர்த்தவர்

(A) ஜி.யு. போப்

(B) ஜி. குப்புசாமி

(C) லெட்சுமி

(D) ப. ஜெயப்பிரகாசு

37. இராம நாடகத்தை இயற்றியவர் யார்?

(A) விசுவநாத சாஸ்திரியார்

(B) அருணாச்சலக்கவிராயர்

(C) இராமச்சந்திர கவிராயர்

(D) மாரிமுத்துப் பிள்ளை



Teachingninja.in

38. ‘மரபுக் கவிதையில் வேர் பார்த்தவர் :

புதுக் கவிதையில் மலர் பார்த்தவர்’ என்று பாராட்டப்படுபவர் யார்?

(A) அப்துல் ரகுமான்

(B) ந. பிச்சமூர்த்தி

(C) தமிழ் ஒளி

(D) சுத்தானந்த பாரதியார்

39. “உச்சி மலையிலே ஊறும் அருவிகள்

ஒரே வழியில் கலக்குது

ஒற்றுமை யில்லா மனிதகுலம்

உயர்வு தாழ்வு வளர்க்குது” – என்று பாடியவர்

(A) கண்ணதாசன்

(B) அ. மருதகாசி

(C) உடுமலை நாராயண கவி

(D) பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம்

40. “இரட்டைக் கிளவி போல் இணைந்தே வாழுங்கள்

பிரிந்தால் பொருளில்லை.......”

என்று உவமை மரபில் புதுமைகளைச் சேர்த்தவர் யார்?

(A) சுப்புரத்தின தாசன்

(B) பாரதிதாசன்

(C) வாணிதாசன்

(D) கண்ணதாசன்

41. பிரெஞ்சுக் குடியரசுத் தலைவரால் ‘செவாலியர்’ விருதினைப் பெற்றவர்

(A) பாரதிதாசன்

(B) வாணிதாசன்

(C) முடியரசன்

(D) சுரதா



Teachingninja.in

42. சுந்தரர் எவ்வரசரால் மகன்மை கொண்டு வளர்க்கப்பட்டார்?

(A) நரசிங்கமுனையரையர்

(B) நரசிம்மவர்மன்

(C) நந்திவர்மன்

(D) நரசிங்கநாதர்

43. யார் பாடிய சித்தர் பாடல்கள் "ஞானப்பாமாலை" என்று வழங்கப்படுகிறது?

(A) பாம்பாட்டிச் சித்தர்

(B) அகத்தியர்

(C) சிவவாக்கியர்

(D) கடுவெளிச் சித்தர்

44. நந்த வனத்திலோர் ஆண்டி – அவன்

நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி

கொண்டு வந்தானொரு தோண்டி

என்ற வரிகளைப் பாடியவர் – யார்?

(A) பத்ரகிரியார்

(B) அகத்திய ஞானம்

(C) கடுவெளிச் சித்தர்

(D) சிவவாக்கியர்

45. ஒரு சொல்லோ தொடரோ இரு பொருள் தருமாறு பாடுவது

(A) தற்குறிப்பேற்றணி

(B) உவமையணி

(C) உருவக அணி

(D) இரட்டுறமொழிதல் அணி



Teachingninja.in

46. எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது ———— என்று பேரறிஞர் அண்ணா கூறினார்.

(A) கலிங்கத்துப்பரணி

(B) திருக்குறள்

(C) கம்பராமாயணம்

(D) குறுந்தொகை

47. 'அரிவடிவு மாய்ப்பின் நரன்வடிவு மாகி'..... என்ற தொடரில் அரி என்பதன் பொருள் யாது?

(A) மனித வடிவம்

(B) சிங்கம்

(C) நரசிங்கம்

(D) தேவர்கள்

48. "நன்று நன்றெனப் போற்றியே நடந்தது வேங்கை" இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல்

(A) தேவாரம்

(B) கம்ப இராமாயணம்

(C) பெரிய புராணம்

(D) சீறாப்புராணம்

49. பெரியபுராணத்தை அருளிய சேக்கிழார் பிறந்த தற்போதைய மாவட்டம் எது?

(A) சென்னை

(B) கடலூர்

(C) விழுப்புரம்

(D) காஞ்சிபுரம்

50. ஒன்றுகொலாம் என்னும் திருப்பதிகம் பாடியவர் யார்?

(A) சுந்தரர்

(B) திருஞான சம்பந்தர்

(C) திருநாவுக்கரசர்

(D) மாணிக்கவாசகர்



Teachingninja.in

51. நேற்று மழை பெய்தது ; அதனால், ஏரிகுளங்கள் நிரம்பின – எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக,

(A) தொடர் வாக்கியம்

(B) கலவை வாக்கியம்

(C) கட்டளை வாக்கியம்

(D) தனிநிலை வாக்கியம்

52. நன்னூல் எவ்வகை நூல்?

(A) செய்தி வாக்கியம்

(B) விழைவு வாக்கியம்

(C) கட்டளை வாக்கியம்

(D) வினா வாக்கியம்

53. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க

பாரதிதாசன் புரட்சிக்கவிஞர் என அழைக்கப்படுகிறார்.

(A) பாரதிதாசன் புரட்சிக்கவிஞர் என அழைக்கப்படுகிறாரா?

(B) புரட்சிக்கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?

(C) பாரதிதாசன் புரட்சிக்கவி என அழைக்கப்படுவதேன்?

(D) பாரதிதாசன் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

54. பாடலில் வரும் திணையைக் கண்டுபிடி

"வான் உட்கும் வடிநீண் மதில்,

மல்லல் மூதூர் வய வேந்தே!"

(A) பாடாண்திணை

(B) பொதுவியல்

(C) வாகைத்திணை

(D) தும்பைத் திணை

55. இலக்கணக் குறிப்பு அறிக,

பசிக்கயிறு

(A) உவமை

(B) அன்மொழித்தொகை

(C) உருவகம்

(D) உம்மைத்தொகை



Teachingninja.in

56. அகர வரிசையில் எழுதுக

மொழிபெயர்ப்பு, முந்நீர், மேடுபள்ளம், மனத்துயர், மீமிசை

(A) முந்நீர், மனத்துயர், மீமிசை, மொழிபெயர்ப்பு, மேடுபள்ளம்

(B) மேடுபள்ளம், முந்நீர், மீமிசை, மொழிபெயர்ப்பு, மனத்துயர்

(C) மீமிசை, முந்நீர், மொழிபெயர்ப்பு, மனத்துயர், மேடுபள்ளம்

(D) மனத்துயர், மீமிசை, முந்நீர், மேடுபள்ளம், மொழிபெயர்ப்பு

57. 'படுவிடம்' – இதில் பயின்றுள்ள தொகைநிலைத் தொடர்

(A) வினைத்தொகை

(B) பண்புத்தொகை

(C) உவமைத்தொகை

(D) உம்மைத்தொகை

58. எச்சொல் வேர்ச் சொல் அல்ல?

(A) அடி (B) இரு

(C) அறி (D) இனிது

59. வந்தான் – வேர்ச்சொல்லைத் தருக.

(A) வார் (B) வா

(C) வரு (D) வந்து

60. "மா" ஓரெழுத்து ஒருமொழியின் பொருளை அறிக,

(A) யானை (B) விலங்கு

(C) மாடு (D) காடு



Teachingninja.in

61. வழூஉச் சொல் இல்லாத தொடரை எழுதுக.

(A) சென்னைக்கு அருகாமையில் இருப்பது மதுரை அல்ல

(B) சென்னைக்கு பக்கத்தில் இருப்பது மதுரை இல்லை

(C) சென்னைக்கு அருகாமையில் இருப்பது மதுரை அல்லை

(D) சென்னைக்கு அருகில் இருப்பது மதுரை அன்று

62. பொருந்தா இணையைத் தேர்வு செய்க.

(A) திருத்தக்கத்தேவர் – வளையாபதி

(B) இளங்கோவடிகள் – சிலப்பதிகாரம்

(C) நாதகுத்தனார் – குண்டலகேசி

(D) சீத்தலைச்சாத்தனார் – மணிமேகலை

63. பொருந்தாச் சொல்லைத் தேர்வு செய்க.

(A) உள்ளம்

(B) அழகு

(C) வீடு

(D) இடம்

64. அரும்புதல் – எதிர்ச்சொல் தருக.

(A) மயங்குதல்

(B) ஓடுதல்

(C) மெலிதல்

(D) விரிதல்



Teachingninja.in

65. இரட்டைக்காப்பியம் – என வழங்கும் நூல்கள் யாவை?

(A) சிலப்பதிகாரம், மணிமேகலை

(B) சீவகசிந்தாமணி, மணிமேகலை

(C) குண்டலகேசி, நீலகேசி

(D) குண்டலகேசி, சூளாமணி

66. பொருத்தமான இணையைத் தேர்வு செய்க.

| | திணை | | சிறுபொழுது |
|---|---|---|---|
| (A) | குறிஞ்சி | – | எற்பாடு |
| (B) | முல்லை | – | நண்பகல் |
| (C) | மருதம் | – | வைகறை |
| (D) | நெய்தல் | – | மாலை |

67. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! – எந்தக்

காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!

– இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்

(A) மோனை, எதுகை, முரண்

(B) மோனை, முரண், அந்தாதி

(C) மோனை, எதுகை, இயைபு

(D) இயைபு, அளபெடை, மோனை



Teachingninja.in

68. நாலடியாரைத் தொகுத்தவர்

(A) கபிலர்

(B) அணிலாடு முன்றிலார்

(C) பதுமனார்

(D) முன்றுரையரையனார்

69. திருக்குறளின் அழியாத் தன்மையைப் பறை சாற்றும் செய்யுள் நூல் எது?

(A) நாலடியார்

(B) பழமொழி

(C) திருவள்ளுவமாலை

(D) திரிகடுகம்

70. அல்லலுற்று ஆற்றாது அழுவாளைக் கண்டு ஏங்கி

மல்லல் மதுரையார் எல்லாருந் தாம் மயங்கி

– இப்பாடலடிகள் இடம் பெற்ற நூல் எது?

(A) மணிமேகலை

(B) குண்டலகேசி

(C) சிலப்பதிகாரம்

(D) வளையாபதி

71. கூற்று 1 : நீலகேசி ஒரு சமணசமயக் காப்பியம்,

கூற்று 2 : குண்டலகேசி என்னும் நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்டது நீலகேசி.

(A) கூற்று 1 மட்டும் சரி

(B) கூற்று இரண்டும் சரி

(C) கூற்று 2 மட்டும் சரி

(D) கூற்று இரண்டும் தவறு



Teachingninja.in

72. கூற்று 1 : 'கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி' என்ற புலவர் கடற்செலவு ஒன்றில் இறந்து போனவர்.

கூற்று 2 : இவர் புறநானூற்றில் ஒரு பாடலையும், பரிபாடலில் ஒரு பாடலையும் இயற்றியுள்ளார்.

(A) கூற்று 2 மட்டும் சரி

(B) கூற்று 1 மட்டும் சரி

(C) கூற்று இரண்டும் சரி

(D) கூற்று இரண்டும் தவறு

73. தமிழரின் வாழ்வியல் கருவூலம் எது?

(A) புறநானூறு

(B) திருக்குறள்

(C) நாலடியார்

(D) இனியவை நாற்பது

74. தமிழுக்குக் 'கதி' எனப் போற்றப்படும் இரு நூல்கள்

(A) திருக்குறளும், நாலடியாரும்

(B) திருக்குறளும், திருவாசகமும்

(C) திருக்குறளும், கம்பராமாயணமும்

(D) சிலப்பதிகாரமும், மணிமேகலையும்

75. "மலை உருவி மரம் உருவி

மண் உருவிற்று ஒருவாளி"

இவ்வரி இடம்பெற்ற நூல்

(A) மகாபாரதம்

(B) கலிங்கத்துப்பரணி

(C) பெரியபுராணம்

(D) இராமாயணம்



Teachingninja.in

76. அரிசியும், மயில்தோகையும், சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்ட நாடுகள்

(A) கிரேக்கம், உரோமாபுரி, சீனா

(B) உரோமாபுரி, எகிப்து, சீனா

(C) கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து

(D) உரோமாபுரி, எகிப்து, அரேபியா

77. யானையின் உருவத்தைச் செதுக்குவதில் கைதேர்ந்த சிற்பிகள் யார்?

(A) சேரர் காலத்துச் சிற்பிகள்

(B) பல்லவர் காலத்துச் சிற்பிகள்

(C) சோழர் காலத்துச் சிற்பிகள்

(D) நாயக்கர் காலத்துச் சிற்பிகள்

78. தில்லையாடி வள்ளியம்மை – இதில் தில்லையாடி என்பது

(A) வள்ளியம்மை பிறந்த ஊர்

(B) வள்ளியம்மையின் தாயார் பிறந்த ஊர்

(C) வள்ளியம்மையின் தந்தை பிறந்த ஊர்

(D) வள்ளியம்மை வாழ்ந்த ஊர்

79. காந்தியடிகளால் "தத்தெடுக்கப்பட்ட மகள்" என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்

(A) தில்லையாடி வள்ளியம்மை

(B) அம்புஜத்தம்மாள்

(C) வேலு நாச்சியார்

(D) ஜான்சிராணி

80. மனித மூளையில் தண்ணீரின் அளவு எத்தனை சதவீதம் கொண்டது?

(A) அறுபது சதவீதம்

(B) எழுபது சதவீதம்

(C) எண்பது சதவீதம்

(D) தொண்ணூறு சதவீதம்



Teachingninja.in

81. கொன்ஸ்டான் என்னும் இத்தாலி மொழிச் சொல்லின் பொருள் யாது?

(A) அஞ்சுபவன்

(B) அடக்கமுடையவன்

(C) அஞ்சாதவன்

(D) அறியாதவன்

82. ஜி.யு. போப் பாய்மரக்கப்பலில் சென்னை வந்த எட்டுத் திங்களும் ————, ———— ஆகிய மொழி நூல்களைப் படித்தார்.

(A) தமிழ், ஆங்கிலம்

(B) வடமொழி, கன்னடம்

(C) தெலுங்கு, தமிழ்

(D) வடமொழி, தமிழ்

83. ஒப்புரவு என்பதன் பொருள்

(A) அடக்கமுடையது

(B) பண்புடையது

(C) ஊருக்கு உதவுவது

(D) செல்வமுடையது

84. வள்ளை – எனும் இன்னிசைப் பாடல் யாரால் பாடப்படும்?

(A) பாணர்கள்

(B) பெண்கள்

(C) ஆடவர்கள்

(D) குழந்தைகள்



Teachingninja.in

85. பரிதிமாற்கலைஞரின் தனிப்பாசுரத்தொகை என்னும் நூலினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?

(A) வில்லியம் ஜோன்ஸ்

(B) பேராசிரியர் ராஸ்க்

(C) கால்டுவெல்

(D) ஜி.யு. போப்

86. "வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார்" எனப் புகழ்ந்தவர் யார்?

(A) பரிதிமாற்கலைஞர்

(B) ரா.பி. சேதுப்பிள்ளை

(C) ந.மு. வேங்கடசாமி

(D) வையாபுரி

87. தமிழ் வழங்கிய எல்லையினை

"வேங்கடம் குமரி தீம்புனற் பெளவமென்

றந்நான் கெல்லை ...... "

என்று வரையறுத்தவர்

(A) காக்கைப்பாடினியார்

(B) ஔவையார்

(C) இளங்கீரனார்

(D) கபிலர்

88. சங்க இலக்கியங்களின் மொத்த அடிகள் எத்தனை?

(A) 26,350

(B) 26,375

(C) 26,400

(D) 26,411



Teachingninja.in

89. 'நாடகச் சாலையொத்த நற்கலாசாலை யொன்று நீடுலகில் உண்டோ நிகழ்த்து' என்று கூறியவர்

(A) பாரதியார்

(B) நாமக்கல் கவிஞர்

(C) சங்கரதாசு சுவாமிகள்

(D) கவிமணி தேசிக விநாயகனார்

90. ஆனந்தரங்கர் நாட்குறிப்பைத் தரவாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் எது?

(A) சஞ்சாரம்

(B) அஞ்ஞாடி

(C) நாளை ஒரு பூ மலரும்

(D) வானம் வசப்படும்

91. ஆலாபனை என்னும் கவிதைத் தொகுப்பிற்கு சாகித்ய அகாதெமி விருது பெற்றவர் யார்?

(A) மேத்தா

(B) பாரதிதாசன்

(C) சிற்பி

(D) அப்துல் ரகுமான்

92. கோ. மோகனரங்கன் பிறந்த ஊர் எது?

(A) ஆலப்புழை

(B) ஆலந்தூர்

(C) ஆமூர்

(D) ஆனங்கூர்



Teachingninja.in

93. ‘கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழின் சொல்லை மணியாகத் தொடுத்து’ என்ற தாலாட்டுப் பாடலைப் பாடியவர் யார்?

(A) இராமலிங்கப் பிள்ளை
(B) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
(C) பால்வண்ணப் பிள்ளை
(D) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

94. பாரதிதாசன் எழுதிய ‘பிசிராந்தையார்’ என்னும் நூல்

(A) கவிதை
(B) உரைநடை
(C) சிறுகதை
(D) நாடகம்

95. பொருத்துக :

| | நூல் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| (a) | குயில் பாட்டு | 1. | அப்துல் ரகுமான் |
| (b) | அழகின் சிரிப்பு | 2. | சுரதா |
| (c) | துறைமுகம் | 3. | பாரதியார் |
| (d) | பால்வீதி | 4. | பாரதிதாசன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

96. “நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்” – இக்கூற்றில் ‘நடலை’ என்னும் சொல்லின் பொருள் அறிக?

(A) நோய்
(B) பாதுகாப்பு
(C) துன்பம்
(D) எமன்



Teachingninja.in

97. பாஞ்சாலி சபதத்தில் இடம் பெற்ற பாடல்களின் எண்ணிக்கை யாது?

(A) 401 (B) 405

(C) 410 (D) 412

98. பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை எழுதிய மற்றொரு தூது நூல் எது?

(A) தென்றல் விடு தூது

(B) அன்னம் விடு தூது

(C) தமிழ் விடு தூது

(D) முகில் விடு தூது

99. தஞ்சை வேதநாயக சாத்திரியார் – அவர்களின் ஆசிரியர் யார்?

(A) சுவார்ட்ஸ் பாதிரியார்

(B) கால்டுவெல்

(C) வீரமாமுனிவர்

(D) எச்.ஏ. கிருட்டினபிப்பிள்ளை

100. உத்தரகாண்டம் என்னும் பகுதியை இயற்றியவர்

(A) ஒட்டக்கூத்தர்

(B) வான்மீகி

(C) புகழேந்திப்புலவர்

(D) கம்பர்



Teachingninja.in

SPACE FOR ROUGH WORK



Teachingninja.in

Question Booklet Code : **AAA**

Register Number

**2019**

**Paper-II**

# GENERAL TAMIL WITH GENERAL STUDIES

**Duration : Three Hours]** **[Total Marks : 300**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This question booklet contains **200** questions. Before answering the questions, you are requested to check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. **If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes and get it replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.**
3. Answer **all** the questions. **All** the questions carry equal marks.
4. You must write your register number in the space provided on the top right side of this page. Do not write anything else on the question booklet.
5. An answer sheet will be supplied to you separately by the invigilator to mark the answers.
6. You shall encode your question booklet code in the space provided on page 2 of the answer sheet with Blue or Black ink Ball point pen. If you do not encode properly or fail to encode the above information, your answer sheet will be invalidated.
7. Each question comprises four responses : i.e (A), (B), (C) and (D). You have to select ONLY ONE correct response and mark the same in your answer sheet. If you feel that there are more than one correct response, mark the response which you consider the best. In any case, choose ONLY ONE response for each question. Your total marks will depend on the number of correct responses marked by you in the answer sheet.
8. In the answer sheet, there are **four** circles Ⓐ, Ⓑ, Ⓒ and Ⓓ against each question. To answer the questions, you have to shade the circle of your choice (ONLY ONE) for each question with Blue or Black in Ball point pen. For a particular question, if Ⓑ is the correct answer, you have to mark your answer as below;

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. If you mark more than one answer for a question, the answer will be treated as wrong.
10. You should not remove or tear off any sheet from this question booklet. You are not allowed to take this question booklet and the answer sheet out of the examination hall during the time of examination. After the examination, you must hand over your answer sheet to the invigilator. You are allowed to take the question booklet with you only after the examination is over.
11. **You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.**
12. For question Nos. 101 to 200, the English version is final.
13. You have to write and shade the total number of answer fields left blank on the boxes provided on page 2 of the OMR answer sheet. An extra time of 5 minutes will be provided for this purpose.
14. Failure to comply with any of the above instructions will render you liable for such action or penalty as the Commission may decide at their discretion.

SEAL



Teachingninja.in